# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.5/2011

பி.சா.1– குறுக்கு விசாரணை தொடர்ச்சி– நாள் 01–07–2025.

பெயர் = குமரையா பி.சா.–1

பி.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 3 ம்பிரதிவாதி தரப்பில் கு.வி.–

(1) ஒரே இடத்திற்காகத்தான் வழக்கு தாக்கல் என்றால் சரிதான். சர்வே எண் தெரியாது. நான்குமால் தெரியுமா என்றால் தெரியும். மேற்கே சாயல்குடி ரோடு, வடக்கே கமுதி ரோடு, கிழக்கே முத்துராமலிங்கம் நிலம், தெற்கே காட்டுப்பாதை. தாவாச்சொத்தானது ஒரு ஏக்கர் 12 செண்டுக்கு கொஞ்சம் கூடுதல். தாவாச்சொத்தை முத்துப்பாண்டி அனுபவம் செய்து வருகிறாரா என்றால் நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். எனக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் என் தந்தை அனுபவம் செய்து வந்ததையடுத்து நான் அனுபவம் செய்து வருகிறேன். என் தந்தைக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் சாமியார் உயில் எழுதிக்கொடுத்தார். உயில் எழுதிக்கொடுத்தது எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். நான் பார்த்ததில்லை என்று சாட்சி கூறுகிறார். என் அப்பாவிற்கு எழுதிக்கொடுத்தது முதல் உயில். எனக்கு எழுதிக்கொடுத்தது இரண்டாவது உயில். என் அப்பாவிற்கு எழுதிக்கொடுத்த உயிலின் அசல் என் வீட்டில் உள்ளது. அதை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் வக்கீல் கேட்கவில்லை நான் தாக்கல் செய்யவில்லை என சாட்சி கூறுகிறார். அந்த அசல் உயிலில் உள்ள கையெழுத்தும், பி.வா.சா.ஆ.2 ல் உள்ள கையெழுத்தையும் ஒப்பிட்டு பார்த்துவிடுவார்கள் என்ற காரணத்தினால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–2 உயில் எழுதிய இடத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 யை யார் கைப்பட எழுதினார்கள் என்று எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ.2 ல் சாட்சி கையெழுத்து யார் செய்தார்கள் என்றால் சங்கரலிங்கத்தேவர் மகன் பழனிச்சாமி, காத்தணத்தேவர் மகன் முனியாண்டி ஆகியோர் கையெழுத்து செய்தனர். மேற்படி பழனிச்சாமி இறந்துவிட்டார். முனியாண்டி என் மைத்துனர். என் மைத்துனர் முனியாண்டி சாட்சியமளிக்க வருவாரா என்றால் ஆமாம்.

(2) முனியாண்டி மற்றும் பழனிச்சாமி கையெழுத்து செய்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் தான் சாட்சிகளை அழைத்து சென்றேன். என் அப்பாவின் உயிலில் யார் சாட்சி கையெழுத்து போட்டார் என்றால் முனியசாமி போட்டார். அவரை நான் விசாரித்தானே என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 ல் உள்ள கையெழுத்து ராமலிங்கசன்னியாசியின் கையெழுத்து இல்லை போர்ஜரியாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு எழுதிக்கொடுத்ததாக சொல்வதும் உண்மையானதல்ல, போர்ஜரியாக எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவாச்சொத்தினை நான் இவ்வளவு காலம் அனுபவம் செய்து வருவதற்கு தீர்வை ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பட்டா பெற்றுள்ளேனா என்றால் கொடுக்கவிடாமல் நிறுத்திவிட்டார்கள். 1ம் பிரதிவாதி டேவிட் என்பவரின் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி கொஞ்ச நாள் அனுபவித்து வந்தாரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்குதான் தாவாச்சொத்து பாத்தியம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா இருந்ததால் அதனை விசாரித்து தெரிந்துகொண்டு 3ம் பிரதிவாதி ரூ.1,71,930/- யை கொடுத்து நல்லெண்ணத்தின்பேரில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அதன்பின்பு முத்துப்பாண்டி தாவாச்சொத்திற்கு பட்டா மாற்றி தீர்வை செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை 1ம் பிரதிவாதி டேவிட் அனுபவம் செய்து வந்து தற்போது 3ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் இந்தச்சொத்தை எந்த காலத்திலும் அனுபவம் செய்யாத காரணத்தினால் தான் பட்டா மற்றும் தீர்வை ரசீது என் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு வாதிகளுக்கும் பாத்தியமில்லை என்றால் சரிதான். வாதிகளுக்கும், எனக்கும் பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>

இவ்வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞருக்கு விவரம் சொன்னது யார் என்றால் நான் தான் சொன்னேன். தாவாச்சொத்துக்கள் ராமலிங்க சன்னியாசி மடத்துக்கு பாத்தியம் என்றால் சரிதான். தாவாச்சொத்தை விற்கவோ, வாங்கவோ, வில்லங்கத்திற்கு உட்படுத்தவோ யாருக்கும் உரிமை இல்லை என்றால் சரிதான். மேற்படி மடத்திற்கு டிரஸ்டி ராமலிங்கசன்னியாசி என்றால் சரிதான். மேற்படி மடத்தை ஏற்படுத்தும்போது 1950ம் வருடம் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் உயில்தான் எழுதிக்கொடுத்துள்ளார். 1950ம்

ஆண்டிலேயே பதிவு செய்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தில் தாவாச்சொத்துக்களை எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் மேற்படி மடத்திற்கு யார் டிரஸ்டியாக வருகிறார்களோ அவர்கள் அந்த சொத்துக்களை நிர்வாகம் செய்து அதில் வரும் வருமானங்களை வைத்து தர்மகாரியங்களை செய்ய வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி தாவாச்சொத்துக்களை ராமலிங்கசன்னியாசி தன் பெயருக்கு கிரையம் வாங்கி வா.சா.ஆ.5 ன்படி மடத்துக்கு பாத்தியம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் நானும், எனக்குப்பின்னிட்டு வரும் சன்னியாசிகளும் பந்தக பராதீனம் செய்ய உரிமை கிடையாது என்றும், உரிமையில்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.5 பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின்படி வாழ்நாள்முழுவதும் ராமலிங்கசன்னியாசி தான் டிரஸ்டியாக இருந்து வந்தார் என்றால் சரிதான். அவருடன் என் அப்பாவும் இருந்தார். என் தந்தை அவருக்கு ஒத்தாசையாக இருந்தாரா என்றால் ஆமாம். என் அப்பாவிற்கும், வேறு 3 வது நபர்களுக்கும் தாவாச்சொத்துக்களை எழுதிக்கொடுப்பதற்கு ராமலிங்கசன்னியாசிக்கு அதிகாரமில்லை என்றால் சரியல்ல. 1978 ம் வருடம் என் அப்பாவிற்கு ஒரு உயில் எழுதிவைக்கப்பட்டு 1979 ல் அந்த உயிலை ரத்து செய்துவிட்டார். உயில் என்பது அவருடைய ஆயுளுக்கு பிறகுதான் ஊர்ஜிதத்திற்கு வரும் என்றால் சரிதான்.

(2) 1982 ல் என் பெயருக்கு உயில் எழுதிவைத்துள்ளார். அது பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் தந்தை அந்த சமயத்தில் எழுதமுடியாத நிலையில் இருந்தார், பதிவு செய்யவும் வரவில்லை என்கிறார் சாட்சி. தாவாச்சொத்துக்கள் தும்முசின்னம்பட்டி தெலுங்கு செட்டியார் சமூகத்தினர் தர்மகாரியங்களுக்காக மடம் ஏற்படுத்த இனாமாக கொடுத்த இடம்தான் தாவாச்சொத்துக்கள் என்றால் சரியல்ல. கிரையம் கொடுத்து வாங்கப்பட்டதாகும். தாவாச்சொத்துக்களில் கருப்பசாமி பூசாரியாக இருந்துவருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் பூசாரியாக இருந்து பூஜை செய்து வருகிறோம். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி எங்களுக்கு தாவாச்சொத்துக்களில் அனுபவம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவாச்சொத்துக்களுக்கு வருடவருடம் டிரஸ்டியாக இருக்கும் கருப்பசாமியும், அவரைச்சார்ந்த சமூகத்தை சார்ந்தவர்களும் தான் தாவாச்சொத்தை குருபூஜை செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் மடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராமலிங்கசன்னியாசி சமாதி உள்ளது என்றால் சரிதான். அந்த மடத்திற்கு

ஆட்கள் செல்ல முடியாது என்கிறார் சாட்சி. தாவாச்சொத்துக்களை தவிர இதர சொத்துக்களை மடத்திற்கு ராமலிங்கசன்னியாசி வாங்கினாரா என்றால் எங்களுக்கு தெரியாது. நான் சொன்னபடி உயில் மூலம் தாவாச்சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்துக்களை பொறுத்து வீண் விவகாரம் செய்து நடக்கும் தர்மகாரியங்களை தடைபடுத்தியதால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தர்மகாரியங்கள் எதுவும் நடக்கவில்லை என்கிறார் சாட்சி. தாவாச்சொத்துக்களையும், இதரசொத்துக்களையும் 1ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து அபகரிப்பதற்காக இவ்வழக்கில் நான் எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகளை எனக்குத் தெரியாது. அவர்களது ஊர் தும்முசின்னம்பட்டி. என்னுடைய ஊர் நெடுங்குளம் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் நெடுங்குளத்தில்தான் குடியிருந்து வருகிறேன். கருப்பசாமி என்பவரை டிரஸ்டியாக தேர்வு செய்து அவர்தான் நிர்வாகம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.07.01 13:30:35 +0530